செய்தி வெளியீடு எண்: 512 நாள்: 02.08.2018

## செய்தி வெளியீடு

## மின் உற்பத்தி மற்றும் மின் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் பல்வேறு திட்டப் பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும் மின் உற்பத்தி குறித்தும் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் மற்றும் சாதனைகள் குறித்து இன்று 02.08.2018 மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மின் உற்பத்தி மற்றும் மின் திட்டங்கள் குறித்து துறைவாரியாக ஆய்வு செய்யப்பட்டது. செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் குறித்து எரிசக்தித் துறை முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் திரு. விக்ரம் கபூர் இ.ஆ.ப., அவர்கள் விளக்கம் அளித்தார்.

இக்கூட்டத்தில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் திரு. பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., மின் தொடரமைப்பு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். சண்முகம், இயக்குநர் பகிர்மானம் திருமதி. எம்.ஏ. ஹெலன், இயக்குநர் திட்டமிடுதல் திருமதி. எஸ். கீதா, இயக்குநர் உற்பத்தி திரு. டி. வேல் முருகன், இயக்குநர் இயக்கம் திருமதி. ஆக்ஸிலியம் ஜெயமேரி, மற்றும் அனைத்து தலைமை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**